581



24 JUL 1924

# தென்னிந்தியா வாசக புஸ்தகங்கள்

## இரண்டாம் புஸ்தகம்

T3
031,6(2)
N24
181995

# தென்னிந்தியா

# வாசக புஸ்தகங்கள்

9u:81186
1465

24 JUL 1924

## இரண்டாம் புஸ்தகம்

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிட்டெட்

மதராஸ், பம்பாய், கல்கத்தா, லண்டன்.

1924.

ரிஜிஸ்டர்ட் காபி ரைட்.]

[விலை 4 அணு.

# முன்னுரை

—o—

I. இந்தத்தென்னிந்தியா வாசக புஸ்தகங்கள் பாலர் வகுப்புத் தொடங்கிப் படிப்படியாக மேலே பல வகுப்புக்களுக்கும் பாட புஸ்தகங்களாக இயற்றப்பட்டுள்ளன.

II. இவை சென்னை வித்தியா விசாரணைத் தலைவர்கள் பிரசுரம் செய்திருக்கும் (Scheme of studies) விதிகளை முற்றிலும் தழுவி எழுதப் பெற்றுள்ளன.

III. வகுப்புக்களுக்குத் தகுந்தபடி பாடங்கள், பாஷை நடையிலும், விஷயங்களிலும், அளவிலும் படிப்படியாக உயர்ந்திருக்கின்றன.

IV. தெரிந்த விஷயங்களைக் கொண்டு தெரியாதவைகளைக் கற்பிப்பது சிறந்த போதனுமுறை யாதலால், கீழ் வகுப்புப் புஸ்தகங்களில் சிறுவர்கள் சாதாரணமாய்க் காண முடியாத பொருள்கள் அல்லது ஜீவவர்க்கங்களில் ஒன்றுவது சேர்க்கப்படவில்லை.

V. பிள்ளைகளுக்குப் படிப்பில் ஊக்கமுண்டாக்குவதற்கு ஒவ்வொரு பாடத்தின் தலைப்பிலும், அதற்குச் சம்பந்தமுள்ள சித்திரப்படங்கள் பதிக்கப்பெற்றுள்ளன.

VI. படம்பார்த்துப் படித்தல், பரஸ்பர சம்பந்த போதனை (Correlative method of teaching), சம்பாஷணை, கதை சொல்லல், சொற்றொடராக்கம் (Oral composition), வார்த்தைகட்டுதல் (Word-building), சித்திரம், கைத்தொழில், நீதி முதலிய விஷயங்களைக் கற்பிப்பதற்கு ஏற்றவாறு எழுதப் பெற்றுள்ளன.

VII. பாடசாலையைப் பிள்ளைகள் வெறுக்காமல் விரும்பும்படி செய்வதற்கு இந்தப் புஸ்தகங்கள் ஒத்தாசை செய்யுமென்பது நிச்சயம்.

—W—



இது நல்ல பசு.

பசு பால் கொடுக்கும்.

பால் வெண்மையானது.

இடையன் பால் கறக்கிறான்.

பசு கன்றை நக்குகின்றது.



இது ஒரு குதிரை.

குதிரை வேகமாய் ஓடும்.

அது வண்டி இழுக்கும்.

சவாரி செய்யவும் உதவும்.

அது அறிவுள்ளது.



இந்த மிருகம் யானை.

யானை விலை உயர்ந்தது.

அது பெரிய மிருகம்.

அதற்குத்தும்பிக்கைஉண்டு.

தும்பிக்கை அதன்முகத்தில்

தொங்கும்.



மயில் அழகான பக்ஷி.

அதற்குக்கொண்டைஉண்டு.

அது சிறகைவிரித்துஆடும்.

சிறகு அழகாய் இருக்கும்.

சிறகினால் விசிறி கட்டலாம்.



காகம் கூட்டமாய் இருக்கும்.

எங்கும் பறந்து போகும்.

'கா கா' என்று கத்தும்.

எந்தஇரையையும்தின்னும்.

வெகு காலம் உயிரோடு இருக்கும்.



கூண்டில் இருப்பது கிளி.

அதைக் கூண்டில் வளர்ப்பார்கள்.

அது சோறும் பழமும் தின்னும்.

கற்றுக் கொடுத்தால் பேசும்.

பூனையைக் கண்டால் பயப்படும்.



வாழைமரம் மிகவும் உப-
யோக முள்ளது.
அதன் குலை விளைந்து கீழே
தொங்குகிறது.
அதன் காய்கள் கறி சமைக்க
உதவும்.
அதன் பழம் இனிப்பாய்
இருக்கும்.
அதன் இலையில்சாப்பிடலாம்.



இது ஒரு ரோஜாப்பூ.
இது நல்ல வாசனைஉள்ளது.
இதில் பலவிதம் உண்டு.
இதற்குப் பல இதழ்கள்
உண்டு.
இதழ்கள் மெதுவாய் இருக்-
கும்.



இது ஒருவித மீன்.
மீன்கள் கடலில் அதிகமாய்
இருக்கும்.
மீன்களில் பலவகை உண்டு.
அவை கூட்டம் கூட்டமாய்
வாழும்.
அவை நன்றாய் நீந்தும்.

## 2. படம் சேர்த்துப்படித்தல்.

நான்  ஆடப் போனேன்!

என்  பின்னால் வந்தது.

அங்கே ஒருவன்  வைத்திருந்தான்.

நான் அதன் விலை கேட்டேன்.

அவன் ஆறு  என்றான்.



வீட்டில்  இருக்கிறது.

அதனால், சேவலை வாங்கி வந்தேன்.

அதற்குச் சத்துரு 

பூனை சேவல்மேல் பாய்ந்தது.

அப்பொழுது ஒரு  ஓடிற்று.

பூனை அதைத் தாவிப் பிடித்தது.

சேவல் தப்பிப் பிழைத்தது.



## 3. வீட்டு மிருகங்களின் தொனி.

நான் இராமன் வீட்டுக்குப் போனேன்.
என்னைப்பார்த்து நாய் குரைத்தது.
பூனை சீறி வந்தது.
வண்ணான் கழுதையை ஓட்டி வந்தான்.
அதைக்கண்டு குதிரை கனைத்தது.
கழுதை கத்தத் தொடங்கிற்று.
நான் உள்ளே போனேன்.
அப்போது கிளி பேசிற்று.
முற்றத்தில் நெல் குவித்து இருந்தது.
அதைக் கோழி தின்றது.
நான் கையால் ஓட்டினேன்.
அது கூவிப் பறந்தது.
பின்பு இராமனைக் கண்டு வந்தேன்.

—ய—



# 4. பிள்ளைகளுக்குப் புத்திமதி.

தினமும் கடவுளை வணங்கவேண்டும்.

காலந்தவருமல் பள்ளிக்கூடம் போகவேண்டும்.

பாடங்களை நன்ருய்ப் படிக்கவேண்டும்.

பழம் பாடங்களை மறக்காமலிருக்கவேண்டும்.

உபாத்தியாயர் சொல்வதைக் கவனிக்கவேண்டும்.

அவர் சொல்லை அசட்டை செய்யவேண்டாம்.

கேள்விக்குச் சரியான விடை சொல்லவேண்டும்.

உடம்பைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

உடைகள் அழுக்கில்லாமல் இருக்கவேண்டும்.

கிடைத்தமட்டில் சந்தோஷப்படவேண்டும்.

கிடைக்காத பொருள்மேல் ஆசைவேண்டாம்.

பெற்ரோர்களிடத்தில் அன்பாய் இருக்கவேண்டும்.



## 5. காலம்.

காலையில் சூரியன் உதிக்கிறது.
அது வெளிச்சம் கொடுக்கிறது.
அந்தக் காலத்தைப் பகல் என்கிறோம்.
ஒரு பகல் பன்னிரண்டு மணிநேரம் கொண்டது.
சூரியன் மறைந்தால் வெளிச்சம் போய்விடும்.
அந்தக் காலத்தை இரவு என்கிறோம்.
ஒரு இரவு பன்னிரண்டு மணிநேரம் இருக்கும்.
ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒருநாள்.
ஏழு நாள் கொண்டது ஒருவாரம்.

1. ஞாயிறு.
2. திங்கள்.
3. செவ்வாய்.
4. புதன்.
5. வியாழம்.
6. வெள்ளி.
7. சனி.

__________ என்று
அந்த ஏழு நாள்களுக்குப் பெயர்.

பன்னிரண்டு மாதம் கொண்டது ஒரு வருஷம்.

| | |
|---|---|
| 1. சித்திரை. | 7. ஐப்பசி. |
| 2. வைகாசி. | 8. கார்த்திகை. |
| 3. ஆனி. | 9. மார்கழி. |
| 4. ஆடி. | 10. தை. |
| 5. ஆவணி. | 11. மாசி. |
| 6. புரட்டாசி. | 12. பங்குனி. |

இவை தமிழ் மாதங்கள்.

| | |
|---|---|
| 1. ஜனுவரி. | 7. ஜுலை |
| 2. பிப்ரவரி. | 8. ஆகஸ்டு. |
| 3. மார்ச்சு | 9. ஸெப்டம்பர். |
| 4. ஏப்ரல். | 10. அக்டோபர். |
| 5. மே. | 11. நவம்பர். |
| 6. ஜுன். | 12. டிஸம்பர். |

இவை இங்கிலீஷ் மாதங்கள்.

தமிழ் வருஷத்துக்கு, முதல் மாதம் சித்திரை; கடைசி மாதம் பங்குனி.

இங்கிலீஷ் வருஷத்துக்கு, முதல் மாதம் ஜனுவரி; கடைசி மாதம் டிஸம்பர்.

# 6. அரசர்.



இந்தப்பக்கத்தில் உள்ள இரண்டு படங்களைப் பார்.

அந்தப் படங்கள் யாருடைய படங்கள், உனக்குத் தெரியுமா ?

முதலில் இருக்கும் படம் நம்முடைய ராஜாவின் படம்.

அவருக்கு ஐந்தாவது ஜார்ஜ் என்று பெயர்.



இரண்டாவது படம் அவர் மனைவியார் படம்.

அவருக்கு மேரி ராணியார் என்று பெயர்.

அவர்கள் நம் மேல் பக்ஷமாயிருக்கிறார்கள். நாமும் அவர்கள்மேல் பக்ஷமாயிருக்க வேண்டும்.

கடவுள் அவர்களைக் காப்பாற்றுவாராக.



# 7. கோழி.

**1.** கோழி வீட்டுப் பறவை. ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர். பெண் கோழிக்குப் பெட்டை என்று பெயர். சேவல் நிமிர்ந்து நிற்கும்போது அழகாய் இருக்கும். கோழியின் தலையில் சிவப்பாயிருப்பதற்குக் கொண்டை என்று பெயர். சேவலின் கொண்டை பெரிதாய் இருக்கும். பெட்டையின் கொண்டை சிறிதாய் இருக்கும். சில சேவல்களின் இறகில், சிவப்பு, வெளுப்பு, கறுப்பு, மஞ்சள், ஊதா என்ற ஐந்து நிறங்களையும் காணலாம். சேவல் விடியற்காலையில் எழுந்து கூவும். அது ஒரு போதும் சோம்பலாய் இராது.

**2**. பெட்டைக்கோழி முட்டையிடும். அது சேவலைப்போல அழகாய் இருக்காது. கோழிக் குஞ்சு முட்டையிலிருந்து உண்டாகின்றது. பெட்டைக்கோழி முட்டைகளின் மேல் உட்கார்ந்து அவையம் காக்கும். அதன் உடம்பின் சூடு முட்டைகளின்மேல் பட்டால்தான் அவைகளிலிருந்து குஞ்சுகள் வெளியில் வரும்.

**3**. கோழிக்கு நெல், சோளம், கம்பு முதலிய தானியங்களும் சிறிய புழுக்களும் உணவு. அது குப்பையைக் கிளறி உணவைப் பொறுக்கும்.

**4**. தாய்க்கோழி தன் குஞ்சுகளுக்குத் தானியங்களைப் பொறுக்கித் தின்னக் கற்பிக்கும். பருந்தாவது பூனையாவது வரக்கண்டால், குஞ்சுகளுக்கு எச்சரிக்கை பண்ணும். அப்பொழுது குஞ்சுகள் தாயின் இறகுக்குள் பதுங்கி விடும்.

**5**. பெட்டைக்கோழி வாத்துமுட்டைகளையும் பொறுமையோடு அவையம் காத்துக் குஞ்சு பொரிக்கும். இந்தப் பறவை அதிக உபயோகமானது.

—❀—

## 8. நாய்.

**1**. நான் ஒரு நாய் வளர்க்கிறேன். அது நல்ல நாய். அதை ஐந்து ரூபாய்க்கு வாங்கினேன். அப்போது அது குட்டியாய் இருந்தது. அது மிகுந்த அறிவுள்ளது. நான் சொல்வதைத்

தெரிந்து கொள்கிறது. என் இஷ்டப்படி நடக்கிறது.



**2**. நான் வெளியில் போகும்போது பின்னுல் வரும். நான் படிக்கும்போது என் பக்கத்தில் இருக்கும். நான் தூங்கும்போது எனக்குக் காவலாயிருக்கும். யாராவது வந்தால், குரைத்துத் தெரிவிக்கும். என் சாமான் ஒவ்வொன்றும் அதற்குத் தெரியும். அவைகளை என் உத்தரவு இல்லாமல் பிறர் எடுத்தால் அவர்களை விடாது.

**3**. நான் ஒருநாள் விளையாடப் போனேன். அங்கே ஒரு இடத்தில் புஸ்தகத்தை வைத்து விட்டு விளையாடினேன். பொழுது போய் விட்டது. பின்பு வீட்டுக்குத் திரும்பினேன்.

புஸ்தகத்தை மறந்துபோனேன். பாதி வழியில் நினைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தேன். நாய் புஸ்தகத்தைக்கௌவி எடுத்துக்கொண்டுவந்தது. நான் அதைக் கண்டு சந்தோஷம் அடைந்தேன். அது அந்தப் புஸ்தகத்தை எனக்கு முன்னே வைத்தது. நான் அதை முத்தமிட்டேன். அது சந்தோஷத்தோடு தன் வாலை ஆட்டிற்று. அது உண்மையுள்ள வேலைக்காரனைப் பார்க்கிலும் நன்றாய் வேலை செய்யும்.



## 9. தந்தையின் உபதேசம்.

**1.** கோவிந்தன் ஒருநாள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தான். அவன் தகப்பனார் அவனை

அழைத்து "கோவிந்தா! என் புத்தியைக் கேள், உன்னை யார் வைதாலும் நீ பொறுமையாய் இருக்கவேண்டும். பதிலுக்குத் திட்டக் கூடாது. பிறர் உன்னை நல்ல பிள்ளை யென்று புகழ்ந்தால் கொர்வம் கொள்ளாதே. செய்யவேண்டிய வேலை களைப் பாக்கியில் வைக்காதே. சரியான காலத்தில் உன் வேலைகளைச் செய்து முடி.

**2.** நாய், பூனை, ஈ, எறும்பு முதலான பிராணி-களை வருத்தப் படுத்தாதே. அவைகள் ஆபத்தில் இருந்தால் காப்பாற்று. வழுவழுப்பான மரங்-களில் ஏருதே. தவறி விழுந்தால், கை கால் முதலான அவயவங்கள் ஒடிந்து போகும்.

**3.** உன் தாய் எவ்வளவு கசப்பான மருந்து கொடுத்தாலும் நீ சாப்பிடவேண்டும். இல்லா-விட்டால் நோயால் கஷ்டப்படுவாய்.

**4.** உபாத்தியாயருக்கும் மற்றப் பெரியவர் களுக்கும் எப்போதும் கீழ்ப்படிந்து நட.

கல்வியில் தேற வேண்டுமானால் கவன மாய்ப் படித்து வரவேண்டும். ஒருநாள் சுறுசுறுப்-பாகவும், ஒருநாள் சோம்பலாகவும் இருக்கக்-கூடாது" என்று சொன்னார்.

**5.** கோவிந்தன் அன்று முதல் அவர்சொன்-னபடி கொஞ்சமும் தவருமல் நடந்து வந்தான். பள்ளிக்கூடத்துப் பரிக்ஷையில் அவன் முதலாவ

தாகத் தேறினன். அதற்காக அவனுக்கு ஒரு தங்கப் பதக்கமும், நல்ல குணத்துக்காக ஒரு வெள்ளிப்பதக்கமும் வெகுமதியாகக்கிடைத்தன.



# 10. சம்பாஷணை.

முத்து:—அம்மா! அந்தப் பூனையைப் பிடித்துத் தாருங்கள். அதை நன்ருய் அடிக்க-வேண்டும்.

மீனுக்ஷி:—அது உன்னை என்ன செய்தது?

முத்து:—இதோ பாருங்கள்! என்னை நகங்களால் பீறிவிட்டது.

மீனுக்ஷி:—குழந்தாய்! அது ஏன் உன்னைப் பீறியது? நீ அதைக் கஷ்டப் படுத்தியிருப்பாய்.

முத்து:—இல்லை அம்மா! அது மிகவும் கெட்ட பூனை. நான் அதைப் பக்ஷமாய் வளர்த்து வந்தும் என்னைப் பீறிவிட்டது.

மீனாக்ஷி:—நீ அதை ஒன்றும் செய்யவில்லையா?

முத்து:—இல்லை அம்மா! நானும் அதுவும் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அது என்னைப் பிறாண்டிற்று.

மீனாக்ஷி:—நீ அதைத் துன்பப் படுத்தாமல் இருந்தது உண்மைதானா?

முத்து:—ஆம், அடிக்கவேயில்லை. அதன் காதைப் பிடித்து இழுத்து ஆட்டினேன். அது ஒரு துன்பமாகுமா?

மீனாக்ஷி:—ஓ! பார்த்தாயா? நீ ஆட்டினது அதற்கு வருத்தமாய் இருந்திருக்கும். அதனால் தான் உன்னைப் பிறாண்டிவிட்டது. யாரேனும் உன் காதைப்பிடித்து இழுத்தால் உனக்கு நோவு உண்டாகாதா?

முத்து:—ஆம் அம்மா! நான் சிறிய பையன். எனக்கு அது கஷ்டமாயிருக்கும். நான் தேம்பித் தேம்பி அழுவேன். அது பூனை தானே?

மீனாக்ஷி:—என் அன்புள்ள குழந்தையே! அது பூனை தான். ஆனால், உன் காதுகளைக்

காட்டிலும் பூனையின் காது மிகவும் மெதுவானது. அதை இழுத்தால் அதற்கு அதிக வலி உண்டாகும்.

முத்து :—அப்படியா அம்மா? அதற்கு வலி உண்டாகும் என்று எனக்குத் தெரியாது. தெரிந்தால் அப்படிச் செய்திருக்க மாட்டேன்.

மீனாக்ஷி :—குழந்தாய்! இப்போது தெரிந்து கொள். இனி அப்படிச் செய்யாதே.

முத்து :—இனிமேல் அப்படிச் செய்யவே மாட்டேன் அம்மா.



# 11. போலீஸ்.

முத்து :—அண்ணா! ஜனங்கள் கூம்பல் கூம்பலாய்ப் போகிறார்களே; எங்கே போகிறார்கள்?

முருகன் :—தம்பி! பெரிய பாளையத்தில் இன்று திருவிழா நடக்கிறது. அதைப் பார்க்கப் போகிருர்கள்.

முத்து :—அவ்வளவு போலீஸ் சேவகர்கள் என் வெகு வேகமாய் அங்கே போகிருர்கள்.

முருகன் :—ஜனங்கள் அதிகமாய்ச் சேரு-வதனல், அக்கிரமங்கள் நடக்காமல் காப்பதற்-காக மேல் அதிகாரிகள் இவர்களை அனுப்பி யிருக்கிருர்கள்.

முத்து :—அவ்விடத்தில் என்ன அக்கிரமங்-கள் நடக்கக்கூடும் அண்ணு?

முருகன் :—திருவிழாவில் ஜனங்கள் கூட்ட-மாய் இருப்பார்கள். திருடர்கள் சமயம் பார்த்து அவர்களுடைய சொத்துக்களைத் திருடுவார்கள். சூதாட்டத்தினல் ஜனங்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பார்கள்.

முத்து :—அவர்களைச் சேவகர்கள் பிடித்து என்ன செய்வார்கள்?

முருகன் :—அவர்களைப் பிடித்து நீதிஸ்தலத்துக்குக் கொண்டு போவார்கள்.

முத்து :—திருடர்களை அவ்விடத்தில் என்ன செய்வார்கள் அண்ணு?

முருகன்:—அவர்களை விசாரித்து அவர்கள் மேல் குற்றம் ஏற்பட்டால் சட்டப்படி தண்டனை விதிப்பார்கள்.

முத்து:—அண்ணா! அதோ மணி அடிக்கிறார்கள். வா! வகுப்புக்குப் போகலாம்.



## 12. ஒரு கணக்கு.

**1**. காவேரிப்பட்டணத்தில் கமலம் என்றவளுக்கு இரண்டு சகோதரர் இருந்தார்கள். ஒரு

வன் பெயர் கண்ணு. மற்றவன் பெயர் சாமி. சாமி இளையவன்; சுறுசுறுப்பு உள்ளவன்; ஆனால் வாயாடி.

**2.** ஒரு நாள் அவர்கள் தகப்பனார் இரண்டு ஒட்டு மாம்பழங்கள் கொண்டு வந்து கமலத்தின் கையில் கொடுத்தார். கமலம், "தம்பிமார்களே! தந்தை நமக்கு மாம்பழங்கள் கொடுத்திருக்கிறார். உள்ளே வாருங்கள். அதைப் பங்கிட்டுக்கொள்ளலாம்" என்றாள்.

**3**. சாமி "அக்காள்! எத்தனை பழங்கள் இருக்கின்றன?" என்று கேட்டான். கமலம் "இரண்டு" என்று சொன்னாள்.

**4**. அவன் சந்தோஷத்தினால் குதித்து "ஒன்று, இரண்டு; ஒன்றும் இரண்டும் மூன்று; எனக்கு, அண்ணனுக்கு, அக்காளுக்கு" என்று மூன்று விரல் விட்டு, "நாம் மூன்று பேர் இருக்கிறோம். ஆளுக்கு ஒவ்வொரு பழம் வரும். என்பழத்தை எனக்குக் கொடு. சீக்கிரம் தின்னப் போகிறேன்" என்றான்.

**5**. கமலம் சிரித்துக்கொண்டு இரண்டு பழங்களையும் காண்பித்து "சாமி! நீ புத்திசாலி; கணக்கில் நன்றாய்ப் பழகி யிருக்கிறாய்; இதோ பார்! நான் ஒன்று எடுத்துக்கொண்டேன்; கண்ணுக்கு இதைக் கொடுத்துவிட்டேன்; மூன்றாவது பழத்தைக் கண்டுபிடித்து நீ எடுத்துக்

கொள்; நீ சொன்ன கணக்கின்படி அந்தப் பழம் உன்னுடையது" என்று தின்னத் தொடங்கினுள்.

**6**. சாமி அதிக சாமர்த்தியம் காட்டப்-போய்ப் பழத்தை இழந்து வெட்க மடைந்தான்.

—✿—

## 13. கடவுள்.

**1**. கடவுள் நம்மைப் படைத்தார். நமக்காகச் சூரியனையும் சந்திரனையும் நக்ஷத்திரங்களை-யும் உண்டாக்கினுர். மலை மரம் கடல் முதலிய வற்றையும் படைத்தவர் கடவுள் தான். அவரால் மழை பொழிகின்றது. ஆறு குளங்களில் ஜலம் சுரக்கின்றது. வயல்களில் தானியங்கள் விளை-கின்றன.

**2**. நமக்குக் கண், காது, மூக்கு முதலான அவயவங்களையும் அறிவையும் கொடுத்திருக்-கிறுர். அவர் பரிசுத்தமானவர். அவர் நம்மேல் அன்பாயிருக்கிறுர். நாம் நல்ல காரியம் செய்தால் சந்தோஷப் படுகிறுர். கெட்ட காரியம் செய்-தால் கோபம் கொள்ளுகிறுர்.

**3**. ஆதலால், நாம் பொய் சொல்லுதல் முதலிய கெட்ட காரியங்களைச் செய்யாதிருக்க வேண்டும். நம்மைக் காப்பாற்றும்படி காலையிலும் மாலையிலும் அவரை வேண்டிக் கொள்ளவேண்-டும்.

—✿—



## 14. சகோதர வாஞ்சை.

ஒரு பிரபு தரும பாடசாலை வைத்துப் பிள்ளைகளுக்கு வஸ்திரம், புஸ்தகம், சாப்பாடு முதலானவைகள் கொடுத்துக்கொண்டு வந்தார். ஒருநாள் அவர் பள்ளிக்கூடத்தில் நுழைந்து எல்லாப் பிள்ளைகளையும் பரிக்ஷை செய்யத் தொடங்கினார்.

அவர் கேள்விகளுக் கெல்லாம் கோதண்டபாணி என்ற சிறுவன் சரியாய் விடை கூறினான். அவனுக்குத் தாயும் இல்லை; தந்தையும் இல்லை. ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். பிறகு அவன் மேல் அதிக பக்ஷம் வைத்து அவனுக்குப் பத்து ரூபாய் வெகுமதி கொடுத்தார்.

அவன் "ஐயா! நான் தங்கள் ஆதரவில் வளருகிறேன். எனக்கு வேண்டிய எல்லாவற்-றையும் அப்போதப்போது வாங்கித் தருகிறீர்கள். ஒன்றும் குறைவு கிடையாது. எனக்கு ரூபாய் வேண்டாம். இதை நான் என்ன செய்யப்போகிறேன்?" என்று வணக்கமாகச் சொன்னான்.

அவர் "கோதண்டபாணி, இந்த ரூபாய்க்கு ஒரு நல்ல உடுப்பு வாங்கிக்கொள்" என்றார். சிறுவன் "ஐயா! தாங்கள் தைத்துக்கொடுத்த உடைகள் இன்னும் கிழியவில்லை. வேண்டிய புஸ்தகங்களும் இருக்கின்றன. எனக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவனுக்குப் புஸ்தகம் கிடையாது. அயலார் புஸ்தகத்தை வாங்கிப் படித்து வருகிறான். வஸ்திரங்களும் கிழிந்து விட்டன. தாங்கள் உத்தரவு கொடுத்தால், இந்த ரூபாய்க்குப் புதிய வஸ்திரங்களும், பாட புஸ்தகங்களும் வாங்கி அவனுக்குக் கொடுத்து வரு-கிறேன். அது எனக்கு மிகவும் சந்தோஷமா-யிருக்கும். அவனுக்கு என்மேல் அதிக ஆசை" என்றான்.

கனவான் மிகவும் சந்தோஷப் பட்டு "கோதண்டபாணி! உன் இஷ்டப்படி உன் தம்பிக்கு வேண்டியவைகளை வாங்கிக் கொடுத்து வா! இந்த வருஷம் பரிக்ஷை முடிந்ததும் அவனையும் இங்கே அழைத்து வந்து விடு. உன்னோடு

சேர்ந்து படிக்கட்டும்" என்று ரூபாயைக் கொடுத்தனுப்பினார்.



## 15. சகுனம்.

கண்ணபுரம் என்னும் பட்டணத்தில் ஒரு அரசன் இருந்தான். அவன் ஒரு நாள் அதி காலையில் எழுந்து ஜன்னலின் வழியாய் நோக்கினான். தெருவில் ஒரு ஏழைப் பையன் சிந்தின பண்டங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தான். அப்போது அரசனும் சிறுவனும் ஒருவரையொருவர் பார்க்க நேரிட்டது.

பின்பு அரசன் தலையை உள்ளுக்கு இழுத்த போது ஜன்னலில் தலை பட்டுக் காயம் உண்டாயிற்று. அவன் கோபத்தோடு அந்தச் சிறு-

வனைப் பிடித்துவரும்படி சேவகர்களுக்கு உத்தரவு செய்தான். அவர்கள் உடனே அந்தப் பையனைக் கண்டுபிடித்து இழுத்துக்கொண்டு வந்தார்கள்.

அரசன் அவனை நோக்கி "நான் இன்று எழுந்ததும் உன்முகத்தில் விழித்ததினால் தலையில் காயம் பட்டது. என்னைப்போலவே நாள்தோறும் இந்தப் பட்டணத்தில் பல மனிதர்கள் உன் முகத்தில் விழித்துக் காயமடையலாம். ஆதலால், உன் தலையை வெட்டி விடும்படி உத்தரவு செய்திருக்கிறேன்" என்றான்.

ஐயோ! அந்த ஏழைப்பையன் என்ன செய்வான்! அவன் அரசனை வணங்கி, "தருமராஜரே! அடியேன் முகத்தில் விழித்ததனால், தேவரீருக்குத் தலையில் கொஞ்சம் காயம் பட்டது. இது சீக்கிரத்தில் ஆறிவிடும். தங்கள் முகத்தில் முதலில் விழித்த எனக்கு மரண தண்டனை கிடைத்திருக்கிறது. இதை நான் யாரிடத்தில் சொல்லிக் கொள்வேன்?" என்று வணக்கமாய்ச் சொன்னான்.

அரசனுக்கு வெட்கம் உண்டாகிச் சிறுவனை நோக்கி, "பையா! எனக்கு நல்ல புத்தி கற்பித்தாய்; உன் மரண தண்டனையை மாற்றி விட்டேன்; நீ உயிரோடு இரு" என்று அவனுக்கு, வெகுமதி கொடுத்து அனுப்பினான்.

—௦—

# 16. மீன்.

பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற சில பிள்ளைகள் ஒருநாள் கடற் கரையில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களை நோக்கி ஒரு மீன் சொன்னதாவது:—“பிள்ளைகளே! நீங்கள் நிலத்தில் வசித்து வருவதுபோல நாங்கள் நீரில் வாசம் செய்கிறோம். நீங்கள் நீரில் வசிக்கமாட்டீர்கள். நாங்கள் நிலத்தில் இருக்கமாட்டோம். நாங்கள் நீர்க்காற்றை உட்கொள்ளுகிறோம். அதனால் எங்கள் இரத்தம் குளிர்ச்சியாயிருக்கிறது. நீங்கள் நிலக்காற்றை உட்கொள்ளுகிறீர்கள். உங்கள் இரத்தம் சூடாயிருக்கின்றது. நீங்கள் நீரில் விளையாடுகிறீர்கள். ஆனல், நெடுநேரம் அதில் இருக்கமாட்டீர்கள்.”

‘உங்களுக்குச் கால் இல்லையே; நீங்கள் எப்படித் தண்ணீரில் நடமாடுகிறீர்கள்?’ என்று என்னைக் கேட்பீர்கள். நான் சொல்கிறேன்: எங்கள் இரண்டு பக்கங்களிலும் வாலிலும் சிறிய சிறகுகள் முளைத்திருப்பதைப் பாருங்கள். அவற்றின் உதவியால் நாங்கள் கவிழ்ந்து போகாமலும் அடியில் அமிழ்ந்து போகாமலும், உலாவுகிறோம்.

நாங்கள் அநேக இனங்களாய்ப் பிரிந்திருக்கிறோம். நாங்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்போம். ஒவ்வொரு தடவையிலும் நூற்றுக் கணக்கான முட்டைகளை உற்பத்தி யாக்கு-

வோம். சில வேளைகளில் ஆயிரக் கணக்காக அவைகளை வெளிப்படுத்துவதும் உண்டு.

எங்களுக்குள் திமிங்கிலம் என்று ஒரு பெரிய ஜாதி இருக்கின்றது. அந்த மீன் உருவத்தில் மாத்திரம் எங்களைப் போன்றது. அதைத்தவிர அதற்கும் எங்களுக்கும் வேறு எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. எப்படி யென்றால், அதன் இரத்தம் சூடு உள்ளதாயிருக்கும். அது எங்களைப் போல் முட்டை யிட்டுக் குஞ்சு பொரிப்பதும் இல்லை. குட்டிபோட்டு அதற்குப் பால்கொடுத்து வளர்க்கும். ஒவ்வொரு தடவையிலும் ஒரு குட்டிக்கு அதிகம் போடாது. அது எங்களைப் போல் தண்ணீருக்குள் மூச்சுவிடாது. நீர்மட்டத்துக்கு மேலேவந்துதான் மூச்சு விடவேண்டும். அது ஒரு கெட்ட மீன். எங்களை யெல்லாம் பிடித்துத் தின்று விடுகின்றது.

பிள்ளைகளே! இன்று நேரமாயிற்று. இரைக்குப் போகவேண்டும். இன்னொரு நாள் வாருங்கள். எங்கள் உபகாரத்தையும் தொழிலையும் தெரிவிக்கிறேன்'' என்று சொல்லி மறைந்துவிட்டது. பிள்ளைகளும் சந்தோஷத்தோடு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

# 17. மோசம் நாசம்.

மதுரை ஜில்லாவில் மூன்று திருடர்கள் இருந்தார்கள். மூவரும் அதிக துஷ்டர்கள். கொஞ்சமும் கருணை இல்லாதவர்கள். அவர்களுக்கு ஒருவரிடத்திலாவது நம்பிக்கைகிடையாது. பகலில் குடிப்பதும் இராத்திரியில் திருடுவதும் தான் அவர்களுடைய தொழில்.

ஒருநாள் அவர்கள் மதுரைக்கு சமீபமான ஒரு சிறு கிராமத்தில் ஒரு பிரபுவின் வீட்டில் கன்னம் வைத்து நுழைந்தார்கள். அங்கு ஏராளமான பொருள் இருந்தது. திரவியங்



களையும் நகைகளையும் வேண்டியமட்டும் வாரி யெடுத்துக்கொண்டு அவர்கள் ஒரு பெருங்காட்டில் புகுந்து விட்டார்கள்.

மறுநாள் காலையில் அவர்கள் தங்களில் ஒரு வனைப் பார்த்து "தம்பி! இனி நம்மை ஒருவரும் தொடரமாட்டார்கள். இன்று முழுவதும் இந்தக் காட்டில் இருந்து நாளை மதுரைக்குப் போக லாம். நீ சீக்கிரம் நாம் திருடிவந்த கிராமத்துக் குப் போய், நம்மைப்பற்றிப் பேசிக் கொள்வதை முதலில் தெரிந்துகொள். பின்பு நீயும் சாப்-பிட்டு எங்களுக்கும் கொஞ்சம் சாப்பாடு கொண்டு வா!" என்று அனுப்பினார்கள். அவனும் அப் படியே சென்றான்.

பின்பு இருவரில் ஒருவன் " அண்ணே! நான் சொல்வதைக் கேள். இந்தப் பொருளை மூன்றாய்ப் பங்கிட வேண்டாம். சாப்பாடு கொண்டு வந்ததும் அவனைக் கொன்று விட்டு இருவரும் எடுத்துக் கொள்ளுவோம்" என் றான். மற்றவன் அதற்குச் சந்தோஷித்து "வீரா எனக்கும் சம்மதம்தான். அப்படியே முடித்து விடுவோம். முதலில் சாப்பாடு வரட்டும்" என்று சொன்னான்.

ஊருக்குச் சென்ற திருடன் "சாப்பாட்டில் கொஞ்சம் விஷம் கலந்துவிட்டால், இருவரும் இறந்து போவார்கள்; அப்புறம் அவர்கள் பங்-கையும் நாமே அடைந்து விடலாம்" என்று தீர்மானித்துத் தான் கொண்டுவந்த சாப்பாட்டில் கொஞ்சம் விஷம் கலந்து வைத்தான்.

அவன் காட்டுக்கு வந்ததும் இரண்டு திரு-

டர்களும் அவனை அடித்துக் கொன்று புதைத்து விட்டார்கள். பின்பு இருவரும் சந்தோஷத்தோடு அந்தச் சாப்பாட்டை நிதானமாய்ச் சாப்பிட்டுத் தாங்களும் விஷத்தால் மாண்டார்கள்.

## 18. உதவி.

ஒரு குடியானவன் காட்டுக்குப் போனன். அங்கே எரிந்துகொண்டிருந்த ஒரு புதரில் ஒரு பாம்பு அகப்பட்டுத் தப்ப வழியில்லாமல் மிகவும்



கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது. அது குடியான வனைப் பார்த்து "ஐயா! என்னைக் காப்பாற்றும்! நான் இறந்து போகிறேனே; இந்தப் பாழும்

நெருப்பு என்னைச் சுற்றிக் கொண்டு விட்டதே'' என்று கூறிற்று.

அவன் "பாம்பே, உன்னை நம்பக் கூடாது; நீ துஷ்டப்பிராணி; உன்னைக் காப்பாற்றினால், பின்பு என்னையே கடிக்க வருவாய்'' என்றான். பாம்பு "ஐயா! நான் எவ்வளவு துஷ்டப்பிராணி யானாலும் தங்களுக்குத் துரோகம் செய்வேனா? என் வார்த்தையை நிச்சயமாய் நம்பும்; நான் அதிக ஆபத்தில் இருக்கிறேன்'' என்று வேண்டிக் கொண்டது.

குடியானவன் மனம் இரங்கித் தன்னிடத்தில் இருந்த ஒரு சிறிய பையைக் கோலில் கட்டிப் புதரில் நீட்டினான். பாம்பு 'பிழைத்தேன்' என்று பையில் புகுந்தது. அவன் பையை எடுத்துக்கொண்டு கொஞ்ச தூரம் சென்று அதை அவிழ்த்து விட்டான். பாம்பு உடனே படம் எடுத்து அவனைக் கடிக்க வந்தது.

குடியானவன் பயந்து "துஷ்டப் பாம்பே! என்னைக் கடிக்காதே; நான் உனக்கு உயிரைக் கொடுத்திருக்கிறேன்; உன்னை அப்படியே நெருப்பில் விட்டிருந்தால் செத்துப் போயிருப்பாயல்லவா? சற்று முன்புதானே, கடிக்கமாட்டேன் என்றும் கூறினாய்'' என்றான். பாம்பு "கஷ்ட காலத்தில் சொல்வது நிச்சயவார்த்தை ஆக மாட்டாது; மனிதர்களாகிய நீங்கள் எங்களை அடிக்கிறீர்கள்; எங்களுக்கு விரோதிகள்; உங்களைக்

கண்ட இடத்தில் கடித்துக் கொல்லவேண்டும்; ஆதலால், உன்னைக் கடிக்கப்போகிறேன்'' என்று சொல்லிற்று.

அப்பொழுது அந்த இடத்துக்கு ஒரு நரி வந்தது. குடியானவன் பாம்பின் தீர்மானத்தை அதனோடு கூறினான். நரி பாம்பைப் பார்த்து "நீ இந்தப் பையில் புகுந்து கொண்டது உண்மைதானா?'' என்று கேட்டது. பாம்பு "ஆம்; உண்மை'' என்று சொல்லிற்று. நரி "சர்ப்ப ராஜாவே! நான் நம்ப மாட்டேன்; உன் நீண்ட உடல் இந்தப் பையில் அடங்காது'' என்றது.

அந்த மூடப் பாம்பு "நண்பனே, இதோ பார்!'' என்று அந்தப் பையில் புகுந்து காண்பித்தது. நரி குடியானவனை நோக்கி "மூடா! முதலில் பையைக் கட்டி நெருப்பில் போட்டுச் செல். இனித் துஷ்டர்களுக்கு உதவி செய்யாதே'' என்று கூறிற்று. அவன் நரியின் தந்திரத்தை மெச்சிப் பையை அழுத்தமாகக் கட்டி நெருப்பில் போட்டுவிட்டு ஊருக்குப் போனான்.

—❀—

## 19. பொன்.

உலோகங்கள் பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படுகின்றன. அவைகளில், பொன், வெள்ளி, தாமிரம், இரும்பு, ஈயம், துத்தநாகம், தகரம்

என்பவை முக்கியமானவை. உலோகங்கள் ஜலத்தில் கரையமாட்டா! அனலில் உருகிவிடும்; பின்பு குளிர்ச்சியினால் இறுகிக் கெட்டியாகும்.



பொன் பளபளப்புள்ளது. இது பிளாட்டினம் என்னும் உலோகம் தவிர மற்ற எல்லா உலோகங்களைக் காட்டிலும் கனமுள்ளது. மஞ்சள் நிறமாயிருக்கும். எத்தனை காலம் மண்ணின் கீழ் மறைந்திருந்தாலும் அதில் துருப் பிடிக்காது. அது குறைந்தும் போகாது. துடைத்தால் அதில் மெருகு உண்டாகும். அதில் இலேசில் சூடு ஏறி இலேசில் ஆறிவிடும். அதைக் காய்ச்சிக் கம்பியாக நீட்டலாம்; அச்சமுள்ள தகடாகவும் அடிக்கலாம்.

கொஞ்சமாய்க் கிடைப்பதனாலும், அதிக

பளபளப்பு உள்ளதனுலும், எந்தத் தேசத்திலும் பொன்னுக்கு மதிப்பு அதிகம். காதிலும் கழுத்திலும் கையிலும் அணியக் கூடிய ஆபரணங்கள் பலவும் பொன்னுல் செய்யப்படுகின்றன.

துரைத்தனத்தார் பொன்னுல் நாணயங்கள் உண்டாக்கி வழங்கி வருகிருர்கள். அதற்குப் ப்வுன் என்று பெயர். கால் பவுன், அரைப் பவுன் இரண்டும் பொன் நாணயங்கள்தான். இதுவன்றித் தட்டு, கிண்ணம், கடிகாரம், சங்கிலி முதலானவைகளையும் பொன்னுல் செய்து கொள்ளலாம்.

## 20. யூனியன்.

மகன் :—அம்மா! தெருவில் ஒருவன் வந்து விளக்கு ஏற்றுகிருனே, அவன் யார்?

தாய் :—குழந்தாய்! அவன் யூனியன் வேலைக்காரன்.

மகன் :—யூனியன் என்ருல் என்ன அம்மா?

தாய் :—ஜனங்களின் சுகத்தை விருத்திசெய்கின்ற சபைக்கு யூனியன் என்று பெயர்.

மகன் :—அவர்கள் என்ன வேலை செய்கிருர்கள்?

தாய்:—சிலர் காலையிலும் மாலையிலும் தெருக்களைச் சுத்தம் பண்ணுகிருர்களே; அவர்களைப் பார்த்திருக்கிருயா?

மகன்:—ஆம், அம்மா! பார்த்திருக்கிறேன். குப்பையைக் கூட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு போகிறார்கள்.



தாய்:—இவர்களும் அந்தச் சபையின் வேலைக்காரர்கள் தான்.

மகன்:—இன்னும் ஏதாவது செய்கிறார்களா அம்மா ?

தாய்:—தெருக்களின் மேடு பள்ளங்களுக்கு மண் கொட்டிக் கெட்டி செய்கிறார்கள். குடிதண்ணீர்க் குளங்களில் அசுத்தம் சேராதபடி காவல்காரர்களை வைத்துப் பாதுகாக்கிறார்கள். தொத்து நோய்களைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

மகன்:—இவைகளையெல்லாம் செய்வதற்கு அதிக பணம் வேண்டுமே. அதற்கு என்ன செய்வார்கள் அம்மா?

தாய்:—கொஞ்சம் கொஞ்சமாய் நம்மிட மிருந்தே வசூல் செய்து கொள்வார்கள். போன புதன்கிழமை ஒருவன் வந்து மூன்று ரூபாய் வாங்கிக்கொண்டு போனான் பார், அவனும் யூனியன் உத்தியோகஸ்தன்தான்.

மகன்:—ஒரு கடிதத்தில் கையெழுத்துப்போட்டுக் கொடுத்தானே, அவனா அம்மா?

தாய்:—ஆம், அவன்தான்.

மகன்:—இது நல்ல ஏற்பாடு. எல்லாருக்கும் சுகத்தை உண்டு பண்ணுகிறார்கள். இன்னும் என்ன செய்கிறார்கள்? நன்றாய்ச் சொல்லுங்கள்.

தாய்:—குழந்தாய்! இன்று இவ்வளவு போதும். நீ பள்ளிக்கூடம் போ, நேரமாகின்றது. மற்றொரு நாள் சாவகாசமாய்ச் சொல்கிறேன்.

மகன்:—நல்லது அம்மா.

## 21. நாயின் கதை.

ஒரு துருக்கனிடத்தில் அறிவுள்ள நாய் ஒன்று இருந்தது. அவன் அதைத் தன் குழந்-

தையைப் போலப் பக்ஷமாய் வளர்த்து வந்தான். அவனுக்கு ஒரு சமயம் பணம் வேண்டி யிருந்-தது. சில விடங்களில் கடன் கேட்டுப் பார்த்தான். எங்கும் கிடைக்கவில்லை. கடைசியாய்த் தன் நாயை ஒரு வர்த்தகனிடத்தில் ஈடுவைத்து நூறு ரூபாய் பெற்றுக்கொண்டு அந்த நாய்க்கும் அதைத் தெரியப்படுத்திப் போனான்.



சில நாள் கழித்து அந்த நாய் சந்தோஷத்-தோடு துருக்கன் வீட்டுக்கு வந்தது. அவன் அதைக்கண்டு 'இது வர்த்தகனை மோசம் பண்ணி வந்து விட்டது ; நம்முடைய பேச்சும் பழுதாய்ப் போயிற்று' என்று கோபம் கொண்டு அதை ஒரு தடியினால் அடித்தான். அந்த அடி அதன் மண்-

டையில் பட்டதனால், உடனே அது இறந்து விட்டது.

பின்பு துருக்கன் அதன் கழுத்தில் ஏதோ ஒன்று கட்டி யிருப்பதைக் கண்டு அதை அவிழ்த்துப் பார்த்தான். அதில் ஒரு கடிதமும் சில நோட்டுகளும் இருந்தன. அந்தக் கடிதத்தில் "ஐயா! என்வீட்டில் ஒரு நாள் இரவு திருடன் ஒருவன் நுழைந்து பணப் பெட்டியை எடுத்துக் கொண்டு சென்றான். எல்லாரும் தூங்கிக்கொண்டு இருந்தோம். தங்கள் நாய் அவன்மேல் விழுந்து அவனைக் கடித்துக் காயம் பண்ணிற்று.

திடீரென்று கடித்ததனால், திருடன் 'அப்பாடா!' என்று அந்தப் பெட்டியைக் கீழே விட்டுவிட்டான். அப்புறம் அந்தப் பெட்டியை அவனால் எடுக்க முடியவில்லை. பின்பு கொஞ்சம் சமாளித்துக்கொண்டு தான் கொண்டுவந்திருந்த மாம்சங்களையும் பலகாரங்களையும் நாயின் முன்னே போட்டு ஏமாற்றப் பார்த்தான். அது ஒன்றையும் லக்ஷ்யம் பண்ணாமல் அவன் பெட்டியை எடுக்க வரும்போதெல்லாம் அவனைக் கடித்துக் காயப்படுத்திற்று.

இதற்குள் நான் விழித்துக்கொண்டு வேலைக்காரர்களோடு அங்கே போய்ச் சேர்ந்தேன். திருடன் உயிர் தப்பினால் போதும் என்று ரணகாயத்தோடு ஓடிப்போய்விட்டான். அந்தப் பெட்டியில்

ஆயிரக்கணக்கான நோட்டுகளும் நாணயங்களும் இருந்தன.

நான் தங்கள் நாய் செய்த உதவிக்குச்சந்தோ-ஷப்பட்டு அதற்கு ஆயிரம் ரூபாய் நோட்டுகள் வெகுமதி செய்து இதனோடு அனுப்பியிருக்கி-றேன். தாங்கள் இனி நாயை என்னிடம் அனுப்பவேண்டாம். நான் விடுதலை செய்து விட்டேன்'' என்று எழுதியிருந்தது.

துருக்கன் துக்கப்பட்டு 'இப்படிப்பட்ட நாயை அநியாயமாய்க் கொன்றுவிட்டோமே' என்று தன் மண்டையைத் தானே உடைத்துக் கொண்டு இறந்து போனான்.

## 22. கதைப் பாட்டு.

1. ஆடிப் பாடும் சிறுவர் இருவர்
   அந்தி நேரத்தில்
   வேடிக்கையாய்ச் சமுத்திரத்தை
   விரும்பிக் கண்டனர்.

2. பார்ப்பவர்கள் பயத்தை யடையும்
   படியி ரைச்சல்செய்
   நீர்ப்பரப்பை நிமிர்ந்து நோக்கி
   நெஞ்சம் களித்தனர்.

3. ஒருவன் மற்ற ஒருவனைப்பார்த்
   " துண்மை யுள்ளவென்

அருமை நண்ப என்தன் வார்த்தைக்
கமர்ந்து விடை சொல்வாய்;

4. கடவுளிருக்கும் இடத்தைச் சொன்னால்,
கனத்த மாம்பழம்
உடனளிப்பேன் ஒன்றுனக்கு
ஓதுவாய்" என்றான்.

5. "எங்கும் நிறைந்த கடவுள் இல்லா
திருக்கும் இடத்தை நீ
இங்குச் சொன்னால், இரண்டு பழங்கள்
இப்போ தளிக்கிறேன்."

6. என்று சொன்னான். அந்தச் சிறுவன்.
இளைய பிள்ளைகாள்!
என்றும் உங்கள் இறைவ னடியை
ஏத்திப் பணியுங்கள்.

## 23. காகம்.

ஒருநாள் கேசவனுக்கு அவன் தாய் ஒரு தோசை கொடுத்தாள். அவன் அதைத் தோட்டத்தில் தின்றுகொண்டிருக்கையில், ஒரு காகம் வந்து 'கா! கா!!' என்று கத்திக் "குழந்தையே! எங்கள் கதையைக் கேள்" என்று சொல்லத் தொடங்கிற்று:

"நாங்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறோம். எங்கள் நிறம் கருமை. நாங்கள் ஊரைச் சுத்தம் பண்ணுகிறோம். எப்படியென்றால், தெருக்களில் சிந்திக்கிடக்கின்ற தானியங்களைப் பொறுக்குகிறோம். நீங்கள் சாப்பிட்டு மிகுந்த பதார்த்தங்களை வெளியில் எறிந்து அசுத்தம் செய்கிறீர்கள்.



"அந்த அழுகிய பழங்கள், அழுகிய மாம்சங்கள், கெட்டவுணவுகள் ஆகிய எல்லாவற்றையும் பொறுமையோடு எடுத்துப் புசிக்கிறோம். நாங்கள் சாப்பிடாவிட்டால், அந்தப்பொருள்கள் இன்னமும் அதிகமாக அழுகிக் கெட்ட நாற்றத்தை உண்டாக்கும். நீங்கள் அந்தக் கெட்ட காற்றைச் சுவாசித்து நோயில் விழுவீர்கள்.

"காலைமுதல் மாலைவரையில் நிமிஷம் கூடப் பிசகாமல் எங்கள் தொழிலைச் செய்து வருகிறோம். தினமும் விடியற் காலையில் உங்களை

எழுப்புகிறோம். நாங்கள் எப்போதும் தனித்துச் சாப்பிடமாட்டோம். சிநேகிதர்களைக் கூவி அழைத்து அவர்களோடு சேர்ந்துதான் உண்ணுவோம். மாலையில் உடம்பு குளித்து எங்களைச் சுத்தம் பண்ணிக்கொள்ளுகிறோம். தினந்தோறும் இராத்திரியில்தான் நாங்கள் வீட்டுக்குப் போவது வழக்கம். எங்கள் வீடு மரக்கிளைகளில் இருக்கின்றது.

"நாங்கள் எளிய பறவைகள். நீங்கள் ஒரு நாளாவது எங்கள் மேல் இரக்கம் பாராட்டுவதில்லை. நல்ல தின்பண்டங்களையெல்லாம் நீங்களே வைத்துத் தின்கிறீர்கள். எங்களுக்குக் கொஞ்சமும் கொடுப்பதில்லை. இதை நினைக்க எங்களுக்குத் துக்கம் உண்டாகின்றது. அதனால் எங்களையும் அறியாமல் சில சமயங்களில் கோபம் வந்து உங்கள் கையில் உள்ள தின்பண்டங்களைப் பிடுங்கிச் செல்கிறோம். அப்பொழுது நீங்கள் எங்களைத் திட்டுகிறீர்கள். கற்களால் அடிக்கிறீர்கள். நாங்கள் என்ன செய்வோம்? எங்களுக்கு யார் நல்ல தின்பண்டங்களைக் கொடுப்பார்கள்! நீங்கள் தானே கொடுக்கவேண்டும்.

"குழந்தையே! சில சமயங்களிலாவது எங்களுக்கு நல்ல தின்பண்டங்களைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்து. என் வேலை அப்படியே கிடக்கின்றது. நான் போகவேண்டும்" என்று சொல்லிற்று.

கேசவன் சந்தோஷித்து அதற்குக் கொஞ்சம் தோசை கொடுத்தான். அது அதைப் பெற்றுக்கொண்டு பறந்துபோயிற்று.

## 24. தந்தை பிள்ளைகளுக்கு வைத்த ஆஸ்தி.

மேற்குத்தேசத்தில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்கு ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. அவன் அதை நன்றாய்ப் பயிர்செய்து ஜீவனம் பண்ணிவந்தான். அவனுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களும் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்து வந்தார்கள்.

தந்தை தன் மரண காலத்தில் புத்திரர்களைப்பக்கத்தில் கூப்பிட்டு, "என் அன்புள்ள பிள்ளைகளே! எனக்கு மரணம் சமீபித்து விட்டது. நீங்கள் நால்வரும் ஒருவரோடொருவர் விரோதம் கொள்ளாமல் ஒற்றுமையாக இருந்து வாருங்கள். திராட்சைத்தோட்டம் நம் குடும்பத்துக்குப் பெரிய ஆஸ்தி. எப்படிப்பட்ட ஆபத்துக்கள் வந்தாலும் அதை விற்கவேண்டாம். அதில் புதையல் இருக்கிறது" என்று சொல்லி மரணம் அடைந்தான்.

பிள்ளைகள் தந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளை முடித்துவிட்டுத் தோட்டத்துக்குப்போனார்கள். திராட்சைத் தோட்டத்தில் தனம்

இருக்கின்றது என்று தகப்பனுர் சொல்லியதை அவர்கள் மறக்கவில்லை. அதைக் கண்டுபிடிப்பதற்கு நால்வரும் மண் வெட்டி கடப்பாரைகளினுல் தோட்டம் முழுவதும் ஆழமாய்த் தோண்டினுர்கள். எங்கும் புதையலைக் காணவில்லை. அவர்கள் இளைப்படைந்து தந்தை மறந்து சொன்னுர் என்று நினைத்துத் திராட்சைக் கொடிகளைப் பத்திரமாய்க் காப்பாற்றி வந்தார்கள்.

தோட்டம் ஆழமாய்த்தோண்டப்பட்டதனுல் கொடிகள் அதிக ஆழம் வேர் ஊன்றி வளர்ந்து நல்ல பலனைக் கொடுத்தன. திராட்சைக்குலை ஒவ்வொன்றும் மிகவும் பெரிதாய் நீண்டிருந்தது. அந்த வருஷம் அவர்களுக்கு முன்னிலும் ஐந்து மடங்கு லாபம் அதிகமாய்க் கிடைத்தது. அப்புறம் அவர்கள் தந்தை சொல்லிப்போன தனம் இதுதான் என்று தெரிந்துகொண்டு சந்தோஷப்பட்டார்கள்.

—ↀ—

## 25. கதைப் பாட்டு.

1. செட்டி யொருவன் மூடனைச்
   சேர்ந்து பயணம் போகையில்
   வட்ட மான சூரியன்
   மறைய இருளும் சூழ்ந்ததே.

2. கள்ளர் கூடி வாழ்ந்திடும்
   காட்டின் நடுவில் செட்டிதான்

உள்ளம் கலங்கி யோரிடத்
தொதுங்கி மறைவாய்ப் படுத்தனன்.

3. மூடன் சற்றுத் தூரத்தில்
முடங்கிப் படுத்துத் தூங்கினுன்;
காட டைந்த செட்டிதன்
கண்கள் மூட வில்லையே.

4. பாதி இரவில் திருடர்கள்
பாதை வரவே மூடன்மேல்
மோதி யொருவன் இடறியே
முட்டி மண்ணில் வீழ்ந்தனன்.

5. எழுந்து நின்று கட்டைபோல்
இங்கொன் றுள்ள தென்றனன்
கொழுந்து தணலைப் போலவே
மூடன் கோபம் கொண்டனன்.

6. "உங்கள் கட்டை மடியிலே
ஒரு பணத்து முடியுடன்
இங்குத் தங்கி யிருக்குமோ"
என்று தானுஞ் சொல்லினுன்.

7. "செல்லாப் பணத்தை வைத்து நீ
சேர வந்தாய் காட்டிலே
பொல்லா மனிதன் என்றுமே!"
திருடர் புகலக் கேட்டனன்.

8. "நல்ல செட்டி யார்புதர்
நடுவில் அங்குப் படுத்துளார்

செல்லும் செல்லா தென்பதைச்
சென்று கேட்டுக் கொள்ளுங்கள்"

9. என்று மூடன் சொல்லவே
எழுந்து செட்டி நகைகளில்
ஒன்றும் விட்டிடாமலே
திருடி யோடிப் போயினர்.

## 26. குற்றமில்லாதவன் தப்பினது.

1. நான்குபெயர் ஒன்ருய்ச் சேர்ந்து பஞ்சு வியாபாரம் செய்தார்கள். பஞ்சு மூட்டைகளை எலிகள் கடித்துவிடுவதைக் கண்டு நால்வரும் ஒரு பூனைக்குட்டியை வளர்த்து அதன் கால்களுக்குத் தண்டை கொலுசு முதலான ஆபரணங்கள் இட்டு வைத்தார்கள். பூனையின் ஒவ்வொரு காலும் ஒவ்வொருவனுக்குச் சொந்தமானது. ஒருவனுக்குச் சொந்தமான காலில் மற்றவன் ஒன்றும் செய்யமாட்டான்.

2. ஒருநாள் பூனைக்கு ஒரு காலில் காயம் பட்டது. அந்தக் காலுக்கு உடையவன் காயத்தை ஆற்றுவதற்காக எண்ணெயில் நனைத்த ஒரு துண்டுச்சீலையைச் சுற்றிவைத்தான். அன்றையதினம் ஒரு பண்டிகை நாள். பூனை அடுப்பின் கிட்டப் போகவே, தற்செயலாய் எண்ணெய்ச்சீலையில் தீப் பற்றிக்கொண்டது. சூடு பொறுக்க மாட்டாமல்

பஞ்சு முட்டைகளின்மேல் அது விழுந்து ஓடின தால், பஞ்சு முழுதும் நெருப்புப்பட்டுக் கரிந்து சாம்பலாய்ப் போயிற்று.

**3.** பூனையின் நன்ருயிருந்த கால்களுக்குச் சொந்தமான கூட்டாளிகள் மூவரும் காயம் கட்டி-னவனை நோக்கி "நீ கட்டின எண்ணெய்சீலையி ஞல்தான் இந்த நஷ்டம் உண்டாயிற்று. ஆத லால், எங்கள் நஷ்டங்களை யெல்லாம் நீயே கொடுக்கவேண்டும்" என்று அவனை நியாயாதி-பதியிடத்தில் இழுத்துக் கொண்டுபோய்ப் பிராது செய்தார்கள்.

**4.** நியாயாதிபதி அவர்களைப் பார்த்து."பூனை உங்கள் நால்வருக்கும் சொந்தமானது. ஆதலால் நீங்கள் ஒவ்வொருவரும் நஷ்டத்தில் நாலில் ஒரு பங்குக்குப் பாத்தியப்படவேண்டும்" என்ருர். நல்ல கால்களுக்குச் சொந்தமான கூட்டாளிகள் மூவ-ரும், "பூனை எங்களுக்குப் பொதுவானதுதான். ஆனுல், முட்டைகளைப் பற்றவைத்த கால் அவ-ருடையது. ஆதலால் அவர்தான் எல்லா நஷ்-டத்துக்கும் பாத்தியபடவேண்டும்" என்ருர்கள். நான்காவது கூட்டாளி நியாயாதிபதியைப் பார்-த்து"ஐயா, அவர்கள் சொல்வது சரிதான். ஆனுல் எல்லா நஷ்டத்தையும் கொடுக்க எனக்குச் சக்தி யில்லை. நஷ்டத்தில் பாதி நான் கொடுத்து விடு கிறேன்" என்ருன். மற்ற மூவரும், "ஒரு காசு கூட நாங்கள்கொடுக்க நியாயமில்லை. எல்லாம்

அவர் தான் கொடுக்கவேண்டும்'' என்று ஒரேபிடி யாய் கூறினார்கள்.

**5.** புத்தி நுட்பம் உள்ள அந்த நியாயாதிபதி அவர்களை நோக்கி "வர்த்தகர்களே! பூனைக்குக் கால் நான்கு. எண்ணெய்சீலை சுற்றியிருந்தகால் நொண்டியாயிருக்கிறது. அந்தக் காலால் அது நடந்திருக்க மாட்டாது. உங்கள் மூன்றுகால்களால்தான் அது பஞ்சு மூட்டைகளின்மேல் ஓடியிருக்கவேண்டும். உங்கள் கால்கள் இல்லாவிட்டால், பஞ்சு மூட்டைகளுக்கு நஷ்டம் நேரிட்டிருக்கமாட்டாது. ஆதலால் பஞ்சின் கிரயத்தில் நான்கில் ஒருபாகத்தை நீங்கள் அவருக்குக் கட்டிக் கொடுக்கவேண்டியது'' என்று தீர்மானம் செய்தார்.

**6.** யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதுபோல அவர்கள் மூவரும் தாங்களாய்த் தேடிக்கொண்ட நஷ்டத்துக்கு மனம் நொந்து வீடு சேர்ந்தார்கள். நஷ்டம் கொடுக்கநேரும் என்று விசனம் அடைந்திருந்த அந்த ஏழை வர்த்தகன் லாபம் கிடைத்ததை நினைத்துச் சந்தோஷப்பட்டான்.

## 27. உண்மையுள்ள சிறுவன்.

**1.** ஒரு ஊரில் ஏழைக்குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் தினந்தோறும் கூலி

வேலைசெய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டு வந்தான். அவன் புத்திரனுக்கு வெங்காஜி என்று பெயர். அவன் ஒரு தருமப் பள்ளிக்கூடத்தில் படித்துவந்தான். அந்த ஊரில் வெள்ளிக்கிழமைதோறும் ஒரு சந்தைகூடும். எல்லாரும் ஒரு வாரத்துக்கு வேண்டிய சாமான்களை அன்று வாங்கி வைத்துக்கொள்வார்கள்.

**2**. "பகல் ஒருமணிக்கு வெங்காஜியிடத்தில் ஒரு ரூபாய் கொடுத்தனுப்பினால், நான் சந்தைக்குப்போய் வேண்டிய சாமான்களை வாங்கி வருகிறேன்" என்று குடியானவன் தன் மனைவியிடம் சொல்லி வெளியே போய்விட்டான். பின்பு வெங்காஜி ரூபாயை வாங்கிக்கொண்டு சந்தைக்குப்புறப்பட்டான். சந்தைகூடும் இடம் ஆற்றுக்கு அக்கரையில் உள்ள ஒரு தோப்பில் இருந்தது.

**3**. வெங்காஜி ஆற்றில் போகும்போது நாலைந்து நாய்கள் சேர்ந்து ஒரு புதியநாயைக் கடித்து உபத்திரவம் செய்து கொண்டிருந்தன. அந்த நாய் தன் உடம்பில் இரத்தம் சொட்டச் சொட்ட எளியமுகம் காட்டிக் குரைத்தது. வெங்காஜி உடனே அங்கே ஓடிக் கழியினால் அந்தத் துஷ்டநாய்களை வெருட்டிப் புதியநாயைக் காப்பாற்றினான்.

**4**. அவன் ஆற்றைக் கடந்து கரைசேர்ந்ததும் மடியில் வைத்திருந்த ரூபாயைக் காணவில்லை. அது எங்கேயோ மணலில் விழுந்துவிட்

டது. வெங்காஜி என்ன செய்வான்? தந்தைக்கு என்ன சொல்வது என்ற பயம் அதிகமாயிற்று. பின்பு ஒன்றும் தோன்ருமல் மறுபடியும் அந்த இடத்துக்கு ஓடித்தேடிஞன். மணலில் அடிகள் நெருக்கமாய்ப் புதைந்திருந்தபடியால் ரூபாய் கிடைக்கவில்லை. அவன் நடந்ததைத் தந்தைக்குச் சொல்லலாம் என்று விசனத்தோடு திரும்பிஞன்.

**5**. அப்போது உயர்ந்த குதிரைமீது வந்த ஒரு பிரபு அவனைக் கூப்பிட்டுச் "சிறுவனே! ஏன் அழுகிருய்?" என்று கேட்டார். வெங்காஜி நடந்ததைச் சொன்ஞன். அவர் "நற்குணமுள்ள சிறுவனே! உபகாரம் வீண்போகாது; உன்னைக் கடவுள் காப்பாற்றுவார்; நீ வருத்தப்படாதே" என்று பத்துத் தங்கநாணயங்களை எடுத்து அவன் கையில் கொடுக்கவந்தார்.

**6**. வெங்காஜி "கனம் பொருந்திய ஐயா! மணலில் விழுந்துபோனது ஒரு ரூபாய்தான்; அஜாக்கிரதையிஞல் போக்கினதற்கு அதை மாத்திரம் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன்; தங்க நாணயங்கள் எனக்கு வேண்டாம்; 'இவ்வளவு பணம் உனக்கு எப்படி வந்தது?' என்று கேட்பார்கள்" என்ருன்.

**7**. பிரபு கொஞ்சம் யோசித்து "அருமைச் சிறுவனே! அக்பர் சக்கரவர்த்தி இதைக் கொடுத்தார் என்று சொல்; அவர் இனி உன்னைக்கைவிட

மாட்டார்" என்று தம் கையில் வைத்திருந்த பத்துத் தங்கநாணயங்களையும் அவனுக்குக் கொடுத்தார். வெங்காஜி பயபக்தியோடு கீழேவிழுந்து பணிந்து "மகாராஜாவே! நான் தங்கள் அடிமை; சொன்னபடி நடக்கிறேன்" என்று அவர்கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொண்டான். சக்கரவர்த்தி அவனைத் தம் அரண்மனைக்கு வரும்படி சொல்லி விட்டுச் சென்றார்.

**8**. பின்பு வெங்காஜி சக்கரவர்த்தி அரண்மனையில் சென்று கல்விகற்று நாளடைவில் ஒரு நாட்டுக்குத் தலைவனாய் விளங்கினான்.



## 28. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

**1**. ஓநாய் ஒன்று ஒரு நாள் ஓர் ஆற்றில் நீர் குடித்துக்கொண்டிருந்தது. அப்போது, அதற்கு

வெகுதூரத்தில், அதே ஆற்றில் ஆட்டுக்குட்டி ஒன்றும் நீர் குடித்துக்கொண்டிருந்தது.

**2.** அதைக் கண்ட ஓநாய், அந்த ஆட்டுக்-குட்டியண்டை போய் "நீ ஏன் இந்த நீரைக் கலக்குகிறாய்? நீ கலக்கும் நீர் என்னிடத்துக்கு வந்து நான் குடிக்கும் நீரைக் கெடுத்துவிடுகி-றதே!" என்று கோபமாய்ச் சொல்லியது. ஆட்-டுக்குட்டி, அதன் கோபத்தைக்கண்டு மிகவும் பய-ந்து "ஐயோ! இது என்ன அநியாயம்! உன்னி டத்திலிருக்கும் நீர் என்னிடத்துக்கு ஓடிவருகி-றதேயல்லாமல், என்னிடத்தில் உள்ள நீர் உன்-னிடத்துக்கு வரவில்லையே! அப்படியிருக்க நான் கலக்கும் நீர் உன்னிடத்துக்கு எப்படி வரும்?" என்றது.

**3**. அப்பொழுது ஓநாய் "அது இருக்கட்டும்; ஆறு மாதத்துக்குமுன் நீ என்னைத்திட்டி-னாய் என்று கேள்விப்பட்டேன், ஏன் என்னைத்-திட்டினாய்?" என்று கேட்டது. ஆட்டுக்குட்டி, "ஐயோ, நான் பிறந்து இன்னும் மூன்றுமாதம் கூட ஆகவில்லையே, ஆறு மாதத்துக்குமுன் நான் உன்னை எப்படித் திட்டியிருக்கக்கூடும்?" என்று சொல்லியது.

**4**. அந்தப் பொல்லாத ஓநாய், "நீ திட்டி-யிராவிட்டாலும் உன் பாட்டனாவது திட்டியிருப்-பான். ஆகையால் உன்னை நான் விடமாட்டேன்" என்று சொல்லி ஒரு குற்றமும் செய்யாத அந்த

ஆட்டுக்குட்டியைப் பிடித்துக் கொன்று தின்று விட்டது.

பொல்லாதவர்கள் இப்படித்தான் தங்கள் சுய நன்மைக்காக குற்றமில்லாதவர்கள் மீதும் குற்றம் சுமத்தி அவர்களுக்குத் தீங்கு செய்வார்கள்.



## 29. கெர்வமும் வணக்கமும்.

**1.** ஓர் ஆற்றின் கரையில் கோரைப்புற்கள் அதிகமாய் முளைத்திருந்தன. அவைகளுக்குக் கொஞ்ச தூரத்தில் காட்டுவாகை மரம் ஒன்று இருந்தது. அது பல கிளைகளோடும் கொம்புகளோடும் மிகவும் உயரமாய் வளர்ந்திருந்தது.

**2.** மழைகாலத்தில் ஒரு நாள் மிகக் கடுமையான மழைபெய்தது. அதிக மும்முரமாக இடி

இடித்தது. மின்னல் விட்டுவிட்டு மின்னியது. மழை சற்று நின்றதும் சுழற்காற்று அதிகவேகமாக அடித்தது. அப்போது காட்டுவாகையின் கிளைகள் எல்லாம் முறிந்து விழுந்து விட்டன. பிறகு அந்த மரமே வேரோடு பெயர்ந்து தரைமேல் விழுந்துவிட்டது.

**3**. சிலமணிநேரத்துக்குப்பின் சுழற்காற்று நின்றது. அப்போது, கோரைப்புற்கள் மாத்திரம் அழிந்து போகாமல், எப்பொழுதும் போல, செழிப்பாய் இருந்தன. கீழே விழுந்த காட்டு-வாகை அவைகளை நோக்கி, “அற்ப பலமுள்ள கோரைகளே! சற்று முன் அடித்த சுழற்காற்றால் எவ்வளவோ பலமுள்ள நான் வேரோடு முறிந்து கீழே சாய்ந்து கிடக்கிறேன், பாருங்கள். இனி நான் தலையெடுக்கப் போவதில்லை. என் உயிர் அநேகமாய்ப் போய்விட்டது. குறை உயிரும் இன்னும் கொஞ்சநேரத்தில் போய்விடும். அதற்குள் உங்களைக் கேட்டு ஒரு விஷயம் தெரிந்து-கொள்ள விரும்புகிறேன்” என்றது.

**4**. அதைக் கேட்ட கோரைப் புற்களில் ஒன்று மிகவும் இரக்கத்தோடு அதை நோக்கி, “அதிக பராக்கிரமசாலியாகிய உமக்கு இப்படி நே-ரிட்டதே! எங்களுக்கு மிகவும் வருத்தமாயிருக்கி-றது, நீர் தெரிந்துகொள்ள விரும்பும் விஷயம் என்ன? அதைச் சொல்லும், பார்ப்போம்” என்-றது.

**5**. அப்பொழுது அந்தக் காட்டுவாகை

"கோரைகளே! இப்பொழுது அடித்த சுழற்காற்ருல், அதிக பராக்கிரமமுள்ள நான் முறிந்து விழுந்துவிட்டேன். மிகவும் பலவீனர்களாகிய நீங்கள் மட்டும் எப்பொழுதும் போல் செழிப்பாய் இருக்கிறீர்களே. இதற்குக் காரணம் என்ன? அதை எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று கேட்டது.

**6**. அப்போது முன் பேசிய கோரை, அந்த வாகைமரத்தை நோக்கி, "வெகு பராக்கிரமசாலியாகிய வாகையாரே! நீர் கேட்டது சரியான கேள்விதான். அதற்குப் பதில் சொல்கிருேம், கேளும்: காற்று மெல்லென்று வீசினுலும் சரி, பலங்கொண்டமட்டும் ஓங்கி அடித்தாலும் சரி, நாங்கள் அதற்குத் தலைவணங்கிக் கொடுக்கிருேம். அதனுலேதான் நாங்கள் அழியாமல் இருக்கிருேம். நீங்களோ, மிகவும் பலமுடையவர்கள் என்ற கெர்வத்தால் சிறிதும் வணங்காமல் அதை எதிர்த்து நிற்கிறீர்கள். அதனுலேதான் உங்களில் பலர் அழிந்துபோகிருர்கள். தம்மினும் பலம் உடைய சத்துருக்களை வெல்ல வேண்டுமானுல் வணங்கி போக வேண்டும். சத்துருக்களின் பலத்தை அறிந்துகொள்ளாமல் கெர்வத்தினுல் எதிர்த்து நிற்கிறவர்கள் அழிந்து போவார்கள்" என்றது.

அப்பொழுதுதான் அந்த வாகைமரம் 'கெர்வத்தினுல் அழிவும், வணக்கத்தினுல் வாழ்வும் உண்டாகும்' என்பதை அறிந்துகொண்டது.



# 30. குள்ள நரியும் திராக்ஷைக் குலையும்.

1. மிருகங்களில் நரி மிகவும் தந்திரமானது. அது காட்டில் வசிக்கும். சில சமயங்களில் அது இராக்காலத்தில் ஊர்களுக்குள் போய், வாத்து, கோழி முதலியவற்றை யாருக்குந் தெரியாமல் பிடித்துக்கொண்டுபோய்விடும்.

**2**. முன் ஒருகாலத்தில் ஒரு சிறு காட்டில் ஒரு நரி இருந்தது. அதற்கு ஒரு நாள் வெகு நேரம் வரையில் இரை அகப்படவில்லை. ஆகையால், பசியினுல் மிகவும் வருந்தி அது இங்குமங்கும் திரிந்துகொண்டிருந்தது. பிறகு அந்தக் காட்டுக்குச் சமீபத்தில் இருந்த ஒரு தோட்டத்துக்குள் போயிற்று. அங்கே, மனிதர் ஒருவரும் இல்லை. ஆகையால், அந்த நரி, இங்கே ஏதேனும் பழம் கிடைக்கும் என்றெண்ணி, தாராளமாக அந்தத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தது.

**3**. அங்கே, குலைகள் நிறைந்த திராக்ஷைக்கொடி ஒன்று இருந்தது. அதைக் கண்டு அந்த நரி மிகவும் சந்தோஷப்பட்டு, அக்கொடியிலுள்ள ஒரு குலையை எட்டி எட்டிப் பறிக்கப் பார்த்தது. குலை அதற்கு எட்டவில்லை. நரி எத்தனையோதரம் குதித்துக் குதித்துப் பார்த்தது. அது எட்டவில்லை.

**4**. பிறகு அந்த நரி மிகவும் சலிப்புடன் "சீச்சீ! இந்தத் திராக்ஷை மிகவும் புளிக்கும். இது எனக்கு எட்டினுலும் இதை நான் பறித்துத் தின்னமாட்டேன். எனக்கு வேண்டுமானுல் நான் இதைப் பறிப்பதுதானு கஷ்டம்? இது தானுய்க் கீழே விழுந்தாலும் எனக்கு வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டது.



# 31. யானை.

பூமியில் வசிக்கும் பிராணிகளுக்குள் பெரியது யானை. அது, குதிரை, மாடு முதலியவைகளைப்போலவே மனிதருக்கு அடங்கி உதவி செய்யும்.

யானைமேல் அம்பாரி வைத்து அரசர்கள் ஊர்கோலம் போவார்கள். காட்டிலும் மலைகளிலும் உள்ள பெரிய மரங்களை யானை பெயர்த்துத்தள்ளும்.

யானையின் முகத்திலிருந்து நீளமாய் ஒன்று தொங்குகிறது பார். அதற்குத் தும்பிக்கை என்று பெயர். அதுவே அதற்குக் கையாகவும் மூக்காகவும் உபயோகப்படுகிறது.

யானை வாயில் இருந்து இரண்டு பக்கங்களிலும் நீளமாய் முளைத்திருப்பவைகளுக்குத் தந்தங்கள் என்று பெயர். யானைத்தந்தத்தால், சிறு பெட்டி, சீப்பு, கத்திப்பிடி முதலியவை செய்வார்கள்.



## 32. கிளி.

இது கிளியின் படம். கிளி ஒரு அழகான பக்ஷி. கிளியைக் கூட்டில் வைத்து வளர்ப்பார்கள். வளர்க்காத கிளிகள் மரங்களில் கூட்டமாய் வசிக்கும்.

கிளியின் உடல் பச்சை நிறமாயிருக்கும். அதன் மூக்கு கூராயும் சிவப்பாயும் இருக்கும். அதன் கால்கள் குச்சிபோல மெல்லியதாய் இருக்கும். நகங்கள் கூர்மையாய் இருக்கும்.

கிளி அதிக உயரம் பறக்காது. கிளிக்குப் பழங்கள் தின்னப் பிரியம் அதிகம். பேசக் கற்றுக்கொடுத்தால் அது பேசும். அதற்குப் பாடத் தெரியாது. பூனை கிளியைக் கண்டால் பிடித்துக் கொன்றுவிடும்.

# 33. செய்யுள் பாடம்.

## உலகநீதி.

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.
3. மாதாவை யொருநாளும்
மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ
டிணங்க வேண்டாம்.
5. போகாத விடந்தனிலே
போக வேண்டாம்.
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித்
திரிய வேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்
8. நஞ்சுடனே யொருநாளும்
பழக வேண்டாம்.
9. நல்லிணக்கம் இல்லாரோ
டிணங்க வேண்டாம்.
10. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.
11. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்க வேண்டாம்.
12. மனம்போன போக்கெல்லாம்
போக வேண்டாம்.
13. மாற்றானை உறவென்று
நம்ப வேண்டாம்.
14. தனம்தேடி யுண்ணாமல்
புதைக்க வேண்டாம்.
15. தருமத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

16. குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

17. கொலைகளவு செய்வாரோ
டிணங்க வேண்டாம்.

18. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.

19. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத்
திரியவேண்டாம்.

20. மூத்தோர்சொல் வார்த்தைகளை
மறக்க வேண்டாம்.

21. முன்கோபக் காரரோ
டிணங்க வேண்டாம்.

22. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டாம்.

23. சேராத விடந்தனிலே
சேர வேண்டாம்.

24. செய்தநன்றி யொருநாளும்
மறக்க வேண்டாம்.

25. உற்றாரை உதாசினங்கள்
சொல்லவேண்டாம்.

26. புறஞ்சொல்லித் திரிவாரோ
டிணங்க வேண்டாம்.

27. வாதாடி வழக்கழிவு
சொல்ல வேண்டாம்.

28. தெய்வத்தை யொருநாளும்
மறக்க வேண்டாம்.

29. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

30. திறம்பேசிக் கலகமிட்டுத்
திரிய வேண்டாம்.

இந்தியாதேச சக்ரவர்த்தியாகிய

# ஐந்தாம் ஜார்ஜ்ஜு மன்னர்

வாழ்த்துப்பாட்டு.

தந்த தந்த தந்த தந்த
தானதன தாத்தனு

வந்தனங்கள் தந்து நின்று
பாடி நிதம் வாழ்த்துவமே

எந்தம் ஐந்தாம் ஜார்ஜ்ஜு மன்னர்
வாழ்கவென வாழ்த்துவமே

அந்த முள்ள மேரி ராணி
அவர்களொடும் வாழ்கவென

சிந்தை ஒன்றி வந்து வந்து
பாடி நிதம் வாழ்த்துவமே. (தந்த)

[library stamp]

Printed at Everymans Press, Madras.

## கழித்தல் வாய்பாடு.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1-ல் | 1 போனால் | 0 | 2-ல் | 2 போனால் | 0 | 3-ல் | 3 போனால் | 0 | 4-ல் | 4 போனால் | 0 |
| 2 | 1 | 1 | 3 | 2 | 1 | 4 | 3 | 1 | 5 | 4 | 1 |
| 3 | 1 | 2 | 4 | 2 | 2 | 5 | 3 | 2 | 6 | 4 | 2 |
| 4 | 1 | 3 | 5 | 2 | 3 | 6 | 3 | 3 | 7 | 4 | 3 |
| 5 | 1 | 4 | 6 | 2 | 4 | 7 | 3 | 4 | 8 | 4 | 4 |
| 6 | 1 | 5 | 7 | 2 | 5 | 8 | 3 | 5 | 9 | 4 | 5 |
| 7 | 1 | 6 | 8 | 2 | 6 | 9 | 3 | 6 | 10 | 4 | 6 |
| 8 | 1 | 7 | 9 | 2 | 7 | 10 | 3 | 7 | 11 | 4 | 7 |
| 9 | 1 | 8 | 10 | 2 | 8 | 11 | 3 | 8 | 12 | 4 | 8 |
| 10 | 1 | 9 | 11 | 2 | 9 | 12 | 3 | 9 | 13 | 4 | 9 |
| 11 | 1 | 10 | 12 | 2 | 10 | 13 | 3 | 10 | 14 | 4 | 10 |

1069

## திவான் பஹதூர்-வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய
## நீதி கதா கிருதிகள்.

'ஈஸாப் கதைகள்' என்று நீதி புகட்டும் பல சிறு கதைகள் வழங்கி வருவதைப் பலரும் அறிந்திருக்கலாம். அக் கதைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டவை. அவைகளின் அருமை பெருமைகளால் அவை இன்னும் அழியாமல் உலகம் முழுவதும் பிரபலமாய் வழங்கி வருகின்றன. அநேகமாய் முக்கியமான பாஷைகள் பலவற்றிலும் அவை மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு அவை மிகவும் ஏற்றவையாயிருக்கின்றன. ஆதலால், காலஞ்சென்ற திவான் பஹதூர்-வி. கிருஷ்ணமாசசாரியார் அவர்கள், அக்கதைகளிற் சிலவற்றை, சிறுவர்கள் இசையுடன் பாடுவதற்கேற்ற கீர்த்தனைகளாக, எளிய நடையில் இயற்றியுள்ளார். அவை, இப்பொழுது நல்ல கடிதத்தில் படங்களுடன் நீதி கதா கிருதிகள் என்னும் புத்தகமாகப் பதிக்கப்பட்டுள்ளன. அணா 4.

## பாலநீதிச் செய்யுள் நூற்றிரட்டு.

ஔவையார், அதிவீரராம பாண்டியன் முதலிய முற்கால வித்வ சிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதி நூல்கள், சிறுவர்கள் மனத்திலும் பதியக்கூடியவாறு தெளிவான எளிய நடையில், மனப்பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந்திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாடசாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்விமான்கள் என்று மதித்திருக்கும் பல தமிழ் மக்கள் கூடத் தங்கள் முன்னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களாயிருக்கிறார்கள். இது தமிழ் நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் மிகவும் மானக்கேடான விஷயமன்றோ? இக்குறைப்பாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதி நூல்களை, சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்து கொள்வதற்கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து, பதவுரையுடன் நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துக்களால் அழகாக அச்சிடலாயிற்று. அந்நீதிநூல்களின் பகுப்பும் அடக்கமும் வருமாறு:

| | அ | பை |
|---|---|---|
| **முதற்படி (ஜூனியர்-Junior).** | | |
| பகுதி-1. உலகநீதி, ஆத்திசூடி. | 1 | 6 |
| பகுதி-2. கொன்றைவேந்தன்; வெற்றிவேற்கை. | 2 | 0 |
| பகுதி-3. வாக்குண்டாம், நல்வழி. | 2 | 0 |
| **இடைப்படி (இண்டர்மீடியேட்-Intermediate).** | | |
| பகுதி-1. நீதி வெண்பா. | 2 | 6 |
| பகுதி-2. நன்னெறி, இனிது 40; இன்னா 40. | 3 | 0 |
| **உயர்படி (ஸீனியர்-Senior).** | | |
| பகுதி-1. முதுமொழிக்காஞ்சி, நீதிநெறி விளக்கம். | 3 | 6 |
| பகுதி-2. திரிகடுகம், நான்மணிக்கடிகை. | | |

South Indian Tamil Reader II—As. 4.